# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate

+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



49

உதவி இயக்குநர்/ உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேலம் மாவட்டம்
அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை : திருமதி.ர.ராணி,பி.இ.,
நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 49–ன்கீழ்

ந.க.எண். 494 /2020/ சே.மா. நாள். 03.03.2021.

ம.வ./சே.மா.( உதிகு) எண். 13/2021

உள்ளாட்சியின் பெயர் : அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றியம்

பொருள்: மனைப்பிரிவு – மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம் மாவட்டம் – சேலம் மாவட்டம்/ வட்டம் – அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றியம் – உடையாப்பட்டி ஊராட்சி/கிராமம் – புல எண் 21/1–ல் 2.34 ஏக்கர் பரப்பு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு – தொழில் நுட்ப ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. மனுதாரர் திரு. ஜி. ராஜாராம், சேலம் அவர்களின் விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் நாள் 12.06.2020 மற்றும் 01.03.2021.
2. வட்டார வளர்ச்சி அலுவலர், அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் ந.க.எண் 1151/2020/தி2 நாள் 01.06.2020 மற்றும் 10.02.2021
3. இவ்வலுவலக கடிதம் இதே எண் நாள் 09.06.2020, 19.06.2020 மற்றும் 24.02.2021.
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 14619/88/பிசிசி, நாள்.27.04.1988.
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 40483/90/எல்ஏ1, நாள்.07.11.1992.
6. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 7978/2012/எல்ஏ2, நாள்.19.04.2012
7. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 13686/2017/எல்ஏ1, நாள்.08.09.2017.
8. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 2201/2017/SPI- Cell, நாள். 28.09.2017.
9. சார்பதிவாளர்(பொ), அயோத்தியாபட்டணம் சார்பதிவாளர் அலுவலகம் அவர்களின் கடிதம் ந.க.எண் 155/2020 நாள் 27.06.2020.

**உத்திரவு :**

பார்வை(1) மற்றும் (2)–ல் காணும் கடிதங்களுடன் பெறப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகாரத்திற்கான கோரிக்கை, பரிசீலிக்கப்பட்டு, பார்வை (3)–ல் சுட்டிய இவ்வலுவலக கடிதம் நாள். 19.06.2020 மூலம் சாலை அமைப்பு வரைபடம் ஒப்புதல் வழங்கப்பட்டு பார்வை (2)–ல் சுட்டிய கடிதம் நாள். 10.02.2021–ல் சாலை மற்றும் பொது ஒதுக்கீடுகள் உள்ளாட்சிக்கு மற்றும் TANGEDCO-ற்கு தானமாக, தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டதனைத் தொடர்ந்து உத்தேச மனைப்பிரிவுக்கு கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

சேலம் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் உள்ளூர் திட்ட குழும பகுதி, சேலம் மாவட்டம் / வட்டம், அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றியம், உடையாப்பட்டி ஊராட்சி/கிராமம், புல எண் 21/1–ல் 2.34 ஏக்கர் பரப்பு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் பேரில் <u>ம.வ/சே.மா.(உதிகு) எண்.13/2021</u> என எண்ணிட்டு கீழ்க்கண்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளின்படி தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்படுகிறது. மனுதாரர் தேவையான உரிமங்களை மற்ற விதிகளின் கீழ் சம்பந்தபட்ட உள்ளாட்சியிடம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

## <u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி/திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

   சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல்வேறுயாரேனும் தனிநபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல".

2. உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

   " The Tamil Nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department, Dated : 22.06.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation and Development) Act 2016. The promoter has to advertise market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority ".

3. உத்தேசம் தொடர்பாக வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பது பின்னர் அறியப்பட்டால் உத்தேசத்திற்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## <u>பொது நிபந்தனைகள்</u>

1. பிரிவு 79 நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 (சட்டம் 35–1972)–ன்படி எந்த நபராவது இந்த உத்திரவு அல்லது தீர்மானத்தினால் பிரிவு 49அல்லது 64(1)–ன் கீழ் மறுக்கப்பட்டிருப்பின் உத்திரவு அளிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் நகர் ஊரமைப்பு இயக்குநர்/அரசுக்கு மேல்முறையீடு செய்யலாம்.

2. சேலம் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் திட்ட அனுமதி அளித்த பிறகு (1)திட்ட அனுமதி பெற தவறான விபரம் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலோ, (2)சட்டப்படி சரியான வழிமுறைகள் கடைபிடிக்கத் தவறியிருந்தாலோ, உறுப்பினர் செயலர் மேற்கண்ட காரணத்தின் அடிப்படையில் திட்ட அனுமதியினை மாற்றவோ ரத்து செய்யவோ உரிமையுண்டு.

3. தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

4. வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கு மற்றும் பயன்பாட்டுக்கு மாறாகவும் கூடுதலாகவும் மனைப்பிரிவு அபிவிருத்திக்கு வரிவிதிக்கப்படின், அத்தகைய மீறல்களுக்கு சம்பந்தப்பட்ட உள்ளாட்சியே பொறுப்பாகும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

5. திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடத்தின் நகலினை மனையிடத்தின் முன்புறத்தில் எந்நேரமும் பார்க்கத்தக்க வகையில் காட்சிக்கு (Display) வைக்கப்பட வேண்டும்.

6. அரசாணை எண்.134, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.20.09.2002–ன்படி அரசாணை எண்.71, ஊரக வளர்ச்சித் துறை, நாள். 16.06.2003–ல் உள்ளவாறு உள்ளாட்சியால் தானமாக தானப்பத்திரம் மூலம் மனுதாரர்களிடம் பெறப்பட்ட சாலைகளில் குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி, தெருவிளக்குகள் போன்ற வசதிகளை மனுதாரர் செய்த பிறகே உள்ளாட்சி மன்றத்தில் ஒப்புதல் பெற்றும் அரசாணையில் கண்டுள்ள இதர நடைமுறைகளை பின்பற்றியும் மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டும்.

3/3/2024

உதவி இயக்குநர்/ உறுப்பினர் செயலர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
சேலம் மாவட்டம்.

3/3/21 · 03/03/21

**இணைப்பு**
முத்திரையிட்ட வரைபடம் – 2
நிபந்தனைப்படிவம் –2

**பெறுநர்**
வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ.),
அயோத்தியாபட்டணம்
ஊராட்சி ஒன்றியம்,
சேலம் மாவட்டம்.

**நகல்**

1. திரு. ஜி. ராஜாராம்,
   த/பெ. கோவிந்தசாமி,
   க.எண்.178, E.B. Colony,
   அயோத்தியாபட்டணம்,
   வாழப்பாடி வட்டம்,
   சேலம் மாவட்டம்.
2. Tamil Nadu Real Estate Regulatory Authority(TNRERA),
   No.1A, 1st Floor,
   Gandhi Irwin Bridge Road,
   Egmore, Chennai-600008.
3. இருப்புக் கோப்பு

**அயோத்தியாப்பட்டணம் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை:திருமதி.சத்யவிஜயன்.,**

**ந.க.எண்.1151/2020/தி3** **நாள்.17 .03.2021**

**பொருள்:** மனைப்பிரிவு – சேலம் மாவட்டம்/சேலம் வட்டம்– அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றியம் உடையாப்பட்டி ஊராட்சி ச.எண்.21/1, ல் அமைந்துள்ள 2.34 ஏக்கர் (101930.40 ச.அடி (அ) 9473.09 ச.மீ) பரப்பில் மனைப்பிரிவு அனுமதி கோரியது – உத்தேச சாலைகள் மற்றும் பூங்காவினை ஒப்படைத்தது – ஒப்புதல் வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக.

**பார்வை:** 1.நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கைக் கடிதம் ந.க.எண்.14619/88/பிசிசி, நாள்.27.04.1988.

2.நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கைக் கடிதம் ந.க.எண். 40483/90/எல்ஏ1, நாள்.07.11.1992.

3.நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கைக் கடிதம் ந.க.எண்.7978/2012/எல்ஏ2, நாள்.19.04.2012.

4.நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கைக் கடிதம் ந.க.எண்.13686/2017/எல்ஏ1, நாள்.08.09.2017.

5.உறுப்பினர் செயலர்(பொ), சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் சேலம் அவர்களது நடவடிக்கைகள் ந.க.எண்.494/2020/சேமா. நாள்.19.06.2020.

6.உறுப்பினர் செயலர்(பொ), சேலம் உள்ளூர் திட்டக் குழுமம் சேலம் அவர்களது நடவடிக்கைகள் ந.க.எண்.494/2020/சேமா. நாள்.03.03.2021.

7.அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களின் கடித ந.க. எண்.12/2021/அ2, நாள்.05.02.2021.

8.தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,மின்பகிர்மான வட்டம், சேலம் அவர்களின் தான பத்திரம் எண்.429/2021. நாள்.02.02.2021.

9. உடையாப்பட்டி ஊராட்சி, கிராம ஊராட்சியின் தீர்மான நாள்,10.02.2021.

**உத்தரவு –**

அயோத்தியாபட்டணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட உடையாப்பட்டி ஊராட்சி ச.எண். 21/1, ல் அமைந்துள்ள 2.34 ஏக்கர் (101930.40 ச.அடி (அ) 9473.09 ச.மீ) பரப்பில் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் பேரில் **ம.வ/சே.மா(உ.தி.கு). எண்.13/2021** என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதியும், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் திட்ட அனுமதியும் உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் அவர்களின் பார்வை 6ல் காணும் உத்தரவில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் 32.05 ச.மீ (0.538% ) உள்ளாட்சிக்கும் மற்றும் 32.47 ச.மீ (0.545% ) TANGEDCO –க்கும் ஒப்படைப்பு செய்த பின்னரே உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என பார்வை 5ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 7 காணும் விவரப்படி உள்ளாட்சிக்கும் மற்றும் 8–ல் காணும் விவரப்படி தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கும்(TANGEDCO) தானம் செய்யப்பட்டுள்ளது.

உடையாப்பட்டி ஊராட்சி ச.எண். 21/1, ல் அமைந்துள்ள 2.34 ஏக்கர் (101930.40 ச.அடி (அ) 9473.09 ச.மீ) பரப்பில் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில் நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி பார்வை 6ல் காணும் செயலாணையின்படி ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து **வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட கடிதங்களில் உள்ள நிபந்தனைகள் அடிப்படையில்** மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**இணைப்பு; வரைபடம்**

**வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)**
**அயோத்தியாப்பட்டணம்.**

**பெறுதல் :**
திரு.ஜி.ராஜாராம்,
த/பெ கோவிந்தசாமி,
இ.பி.காலனி,அயோத்தியாப்பட்டணம்.

**நகல்:**

1.உதவி இயக்குநர்/உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம்
2.வட்டாட்சியர், சேலம்.
3.சார் பதிவாளர், அயோத்தியாப்பட்டணம்.



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals

Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your
real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate